# புனித அந்தோனியார் நவநாள் ஜெபம்



பதுவை பதியராம் புனித அந்தோனியாரே

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும் - (3)

✚ தந்தை, மகன், தூய ஆவியின் பெயராலே - ஆமென்.

பரிசுத்த திரித்துவத்துக்கும் இப்பொழுதும் எப்பொழுதும் தோத்திரம் உண்டாவதாக - ஆமென்.

பரிசுத்த தேவதாயே, எங்கள் துன்ப வேளையில், நாங்கள் உமது அடைக்கலத்தை தேடி உம்மிடம் வருகின்றோம். மகிமை நிறைந்தவளும், மாசில்லாதவளுமான கன்னிகையே, எங்கள் மன்றாட்டைத் தள்ளிவிடாமல், எல்லா ஆபத்துகளிலிருந்தும் எங்களைக் காத்தருளும் - ஆமென்.

இப்புண்ணிய ஷேத்திரத்தில் மாட்சிமை தங்கிய மேலான சிம்மாசனத்தில், கிருபாசனங்கொண்டு எழுந்தருளியிருக்கிற புனித அந்தோனியாரே, பரிசுத்தத்தனம் விளங்கும் லீலியே, விலைமதிக்கப்படாத மாணிக்கமே, பரலோக பூலோக காவலரே, கஸ்தி துன்பப்படுகிறவர்களுக்குப் பரம சஞ்சீவியானவரே, பாவிகளின் தஞ்சமே, உமது இன்பமான சந்நிதானம் தேடி வந்தோம். உமது திருமுக மண்டலத்தை அண்ணாந்து பார்த்து உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம். மகா சிரவணம் பொருந்திய புனித அந்தோனியாரே, சூரத்தனமுள்ள மேய்ப்பரே, பசாசுகளை மிரட்டி ஓட்டுபவரே, திருச்சபையின் கருணையின் கண்ணாடியானவரே, இவ்வுலகில் எங்கள் ஆதரவும்

நீரல்லவோ, எங்கள் தஞ்சமும் நீரல்லவோ, எங்கள் சந்தோஷமும், நம்பிக்கையும், பாக்கியமும் நீரல்லவோ, நீர் எங்கள் ஞானத்தந்தை என்பதை எங்களுக்கு காண்பியும். பிள்ளைகள் செய்த குற்றங்களை தாய் தந்தையர்கள் பாராட்டுவார்களோ, உம்மைத் தேடிவந்த நிர்பாக்கியர்பேரில் தயவாயிரும். அழுகிறவர்களை அரவணையும். அல்லல்படுகிறவர்களுக்கு ஆறுதலாக வாரும். நீர் இரங்காவிட்டால் எங்களுக்கு வேறு யார் இரங்குவார்? நீர் ஆதரியாவிட்டால் எங்களை வேறு யார் ஆதரிப்பார்? நீர் நினையாவிட்டால் எங்களை வேறு யார் நினைப்பார்? நீர் உதவாவிட்டால் எங்களுக்கு வேறு யார் உதவுவார்? தஞ்சமென்று ஓடிவந்த அடியோர்கள் பெயரில் தயவாயிரும். பரிசுத்த வெண்மையின் தூயதான தயாபரமே, தயைக்கடலே, தவிப்பவர்களுக்குத் தடாகமே, தனித்தவர்களுக்கு தஞ்சமே, உமது இன்பமான சன்னிதானம் தேடிவந்தோம். ஆறு, காடு, கடல்களைக் கடந்து ஓடிவந்தோம். துன்பம், பிணி, வறுமை முதலிய கேடுகளினாலே வாடி நொந்தோம். எங்கள் நம்பிக்கை வீண்போகுமோ? எங்கள் மன்றாட்டு மறுக்கப்படுமோ? எங்கள் யாத்திரைகள் பயன் அற்றதாய்ப் போகுமோ? எங்கள் அழுகைக் கண்ணீர் உம்முடைய இதயத்தை உருக்காது போகுமோ? அப்படி ஆகுமோ ஐயா, எங்களின் அன்பான தகப்பனே, எங்களை முழுவதும் ஒப்புக்கொடுக்கிறோம்.
எங்களைக்
கையேற்றுக்கொண்டு
ஆசீர்வதித்தருளும் -ஆமென்.

**இறை மக்களாகிய நாம் நமது தேவைகளுக்காக புனித அந்தோனியார் வழியாக இறைவனிடம் மன்றாடுவோம்.**

எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், நாட்டுத் தலைவர்கள், சமூகத் தலைவர்கள்





அனைவருக்கும் ஞானத்தையும், விவேகத்தையும் அளித்தருள வேண்டுமென்று

புனித அந்தோனியார் வழியாக இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

மக்கள் அனைவரும் சமுதாய சமாதானத்திலும், சமய ஒற்றுமையிலும் சகோதரரை போல் வாழ்கை நடத்த வேண்டுமென்று

புனித அந்தோனியார் வழியாக, இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

இத்திருத்தலத்தை நாடிவரும் பக்தர்கள் உமது திருவளத்தின்படி உடல் நலத்தில் நீடிக்கவும், மன அமைதியற்றோர் நிம்மதி அடையவும் வேண்டுமென்று

புனித அந்தோனியார் வழியாக, இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

தீய நிந்தனையிலிருந்தும், பேயின் சோதனையிலிருந்தும் நாங்கள் விடுதலை பெறவேண்டுமென்று

புனித அந்தோனியார் வழியாக, இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

நாங்கள் விரும்பும் கோரிக்கைகள் கைகூடவும், எங்களை எதிர்கொண்டு வரும் தீமைகள் விலகவும், என்றும் உமது ஆதரவு இருக்கவும் வேண்டுமென்று,

புனித அந்தோனியார் வழியாக, இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.



யாவராலும் கைவிடப்பட்டு, நம்பிக்கை இழந்து நிற்கும், நெருக்கடியான வேளையில், எங்களுக்கு உதவவேண்டுமென்று,

புனித அந்தோனியார் வழியாக, இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**செபிப்போமாக:**

எல்லாம் வல்ல இரக்கமுள்ள இறைவா, உம் அளவிலா அன்புக்குரியவரும், உமது அருளின் துணையால் கோடி அற்புதரென அழைக்கப்படுகின்ற புனித அந்தோனியாரை அண்டி வந்துள்ள பக்தர்களான எங்கள் பேரில் உமது கருணைக் கண்களைத் திருப்பியருளும். எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்துவின் வழியாக உம்மை மன்றாடுகின்றோம் - ஆமென்

**நோயாளிகளுக்காக செபிப்போம்**

ஆண்டவருடைய பெயராலே நமக்கு உதவி உண்டு -

அவரே பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்தார்.

ஆண்டவர் உங்களோடு இருப்பாராக -

உம்மோடும் இருப்பாராக

**செபிப்போமாக:**

ஆண்டவரே உடல் நோயால் வருந்தும் உமது ஊழியரைப் பாரும். நீர் உண்டாக்கிய ஆன்மாக்களுக்கு ஆறுதல் தாரும். நாங்கள்

துன்பங்களினால் தூய்மை அடைந்து, உமது இரக்கத்தினால் விரைவில் குணம் அடையும்படி அருள் புரிவீராக. எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வழியாக உம்மை மன்றாடுகின்றோம் - ஆமென்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, எங்களை பாதுகாக்க எங்கள் நடுவிலும், எங்களைக் காப்பாற்ற எங்களுக்குள்ளும், எங்களுக்கு வழிகாட்ட எங்களுக்கு முன்னும், எங்களுக்கு காவலாயிருக்க எங்கள் பின்னும், எங்களை ஆசீர்வதிக்க எங்கள் மேலும் இருப்பாராக. எல்லாம் வல்ல இறைவன் தந்தை, மகன், தூய_ஆவியார் எங்களை ஆசீர்வதித்து, பாதுகாத்து எங்களை வழிநடத்துவாராக - ஆமென்

**காணாமல் போனவற்றை மீண்டும் பெறுவதற்காக புனித அந்தோனியார் வழியாக இறைவனிடம் செபிப்போம்.**

ஓ மகா உன்னத மகத்துவம் பொருந்திய புனித அந்தோனியாரே, சகல நன்மைகளும் நிறையப்பெற்ற அப்போஸ்தலரே, தேவரீர் காணாமற்போன வற்றை திரும்பக் கண்டடைய செய்கின்ற புதுமைகளைச் செய்யும் வரத்தை ஆண்டவரிடமாக அடைந்திருக்கின்றீரே காணாமல் போனவற்றை திரும்பக் கண்டடையும்படி உமது ஆதரவைத் தேடி வந்திருக்கின்ற அடியேனுக்கு இத்தருணத்தில் உதவி புரிந்தருளும். தேவரீரைக் கொண்டு இத்தகைய மேலான அதிசயங்களைச் செய்கின்ற ஆண்டவரை நான் மேன்மேலும் மகிமைப்படுத்திக் கொண்டாடி வருகின்றேன் - ஆமென்.



**புனித அந்தோனியாரிடம் விசேச உதவியை வேண்டி செபிப்போம்.**

ஓ பரிசுத்தத்தின் வெண்மையான லீலி புஷ்பமே, உன்னதத் தரித்திரத்தின் முன் மாதிரிகையே, மெய்யான தாழ்ச்சியின் கண்ணாடியே, பரிசுத்தத்தின் ஒளிவிடும் நட்சத்திரமே, ஓ மகிமைவிலங்கும் புனித அந்தோனியாரே, உமது திருக்கரங்களில் பாலனாக இயேசு எழுந்தருளிவர விசேஷித்த சுதந்திரம் பெற்று அகமகிழ்தீரல்லோ, அதுபோல் வல்லமையுள்ள உம்முடைய ஆதரவில் எம்மையும் வைத்து காப்பாற்ற வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம். ஆண்டவரால் நீர் பெற்றுக்கொண்ட வரங்களில் புதுமை செய்யும் வரமே உம்மிடத்தில் முக்கியமாய் பிரகாசிக்கிறதல்லோ, தேவரீர் என் பேரில் இரங்கி எனக்கு அவசியமான இந்த காரியத்தில் உதவி செய்ய வாரும். அக்கிரமமான ஆசைப்பற்றுதலையெல்லாம் என் இருதயத்தினின்று நீக்கி அதை சுத்திகரித்தருளும். என் பாவங்களுக்காக நான் மெய்யான மனஸ்தாபப்படவும், ஆண்டவரையும் புறத்தியாரையும் உருக்கமாய் நேசித்து வரவும் எனக்கு வேண்டிய வரத்தை அளித்தருளும். இவ்விதமாய் நான் இம்மையில் ஆண்டவரைப் பிரமாணிக்கமாய் சேவித்து, மறுமையில் உம்மோடு அவரை நித்தியமாய் தரிசித்து போற்றிப் புகழ்ந்து வாழ்த்தக்கடவேனாக - ஆமென்.



+ தந்தை மகன் தூய ஆவியின் பெயராலே - ஆமென்.